## முதலாம் கூடுதல் மாவட்ட நீதிமன்றம் , ஈரோடு

## O.S.No. 232/2013

2025 ஆம் வருடம் ஜூலை மாதம் 16ம் தேதியன்று **DW.1** ஆக விசாரிக்கப்படுபவர் 1969ம் ஆண்டு 54வது சட்டத்திலுள்ள பிரிவு (7ன்படி) **திருமதி.S.எழில்,M.L.,** முதலாம் கூடுதல் மாவட்ட நீதிபதி, ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கே பி ரமேஷ் | --- | : |
| தந்தை /கணவர் பெயர் | : | தொழில் | : |
| கிராமம் | : | வயது | : |
| தாலூக்கா | : | மாவட்டம் | : |

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு**

**முதல் விசாரணை :**

நான் வழக்கில் 3ம் பிரதிவாதி. என் முதல் விசாரணை ஆணையுறுதி பத்திரத்தை தாக்கல் செய்கிறேன். என் முதல் விசாரணை ஆணையுறுதி பத்திரத்தை படித்துப் பார்த்துதான் நான் அதில் உள்ள விவரங்களை ஒப்புக்கொண்டு என் கையொப்பங்களை போட்டுள்ளேன்.

என் தரப்பு சான்றாவணங்களாக 12.6.1997 தேதியில் என் அண்ணன் பரமசிவம் மற்றும் நானும் கிரையம் பெற்ற கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் பிவாசாஆ 3. 8.8.2011 தேதியில் நானும் என் குடும்பத்தாரும் செய்து கொண்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் சான்றிட்ட நகல் பிவாசாஆ 4. தாவா சொத்து என் அம்மா பெயரில் உள்ள பட்டா பிவாசாஆ 5. அ பதிவேட்டின் நகல் பிவாசாஆ 6. அ பதிவேட்டு நகல் பிவாசாஆ 7. கூட்டு பட்டா நகல் பிவாசாஆ 8. கூட்டு பட்டா நகல் பிவாசாஆ 9. கூட்டு பட்டா நகல் பிவாசாஆ 10. அ பதிவேட்டின் நகல் பிவாசாஆ 11. புல எண் 180 க்கான ஆ பதிவேட்டு நகல் பிவாசாஆ 12. சர்வே எண் 180 ஆ பதிவேட்டின் நகல் பிவாசாஆ 13. ச எண். 180/1 ஏ க்கான புல

வரைபடம் நகல் பிவாசாஆ 14. ச எண். 180/1 பி புல வரைபட நகல் பிவாசாஆ 15. ச எண் 180/2 ஏ புல வரைபட நகல் பிவாசாஆ 16. ச எண்.180/2 சி க்கான புல வரைபட நகல் பிவாசாஆ 17. என் தாயார் தங்கம்மாள் பெயரில் உள்ள கந்தாய ரசீதுகள் எண்ணிக்கை 9 பிவாசாஆ 18 வரிசை . என் அண்ணன் பரமசிவம் பெயரில் உள்ள வீட்டு வரி ரசீதுகள் எண்ணிக்கை 17 பிவாசாஆ 19 வரிசை. என் அண்ணன் பரமசிவம் பெயரில் உள்ள குடிநீர் கட்டண ரசீதுகள் எண்ணிக்கை 11 பிவாசாஆ 20 வரிசை. என் அண்ணன் பெயரில் உள்ள மின் கட்டண ரசீது பிவாசாஆ 21 ஆகியவற்றை தாக்கல் செய்கிறேன்.